பார்ஸி சகுந்தலை

சரித்திரம் (டிராமா)

... OF THE REGISTRAR
26
[illegible]

த. துரைசாமி முதலியாரவர்களால்

சென்னை, புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட்] 1927. [காபிரைட்.

த. துரைசாமி முதலியார்,

நெ. 23, பாளையப்பன் தெருவு, மிண்ட் பில்டிங் போஸ்டு, சென்னை.

கூந்தல் வளரும் தைலம்.

அநேக திவ்விய மூலிகைகளால் செய்த எண்ணெயில் கலந்துள்ள சிறந்த வஸ்து பிரதிதினமும காலையில் மயிர்களுக்குப் பூசிவந்தால் கூந்தலானது 8-தினத்தில் ஆலம விழுதுபால உண்மையாய் வளரும். சண்ணீர்ச்சல நீங்கும், பேன்கள் சேராது, சுண்டுகள உண்டாகாது, மயிர்கள் உதிராது, வழுக்கையான இடங்களிலும், மயிர் முளைக்கும், உண்மையாய் கூந்தலை வளர்க்கப் பிரியமுள்ளவர்கள் ஒரு புட்டி வாங்கி உபயோகித்தால் அப்போது உண்மை தெரியும்.

ஒரு புட்டியின் விலை ரூபா 1 0 0

ரோமசங்காரிபவுடர்.

எந்த சமயத்தில் ரோமங்களை அகற்ற வேண்டுமென்று நினைக்கின்றீரோ அப்பொழுதே 'சிறைப் போன்' சிரைக்கும் கத்தி இவை இரண்டினுடைய உதவியுமில்லாமல் உடனே ரோமங்களை நீக்கிவிடும் ரோமங்கள் இருக்கவேண்டாமென்று நாம விரும்புகின்ற இடத்தில் இந்தப்பவுடரைக்கொஞ்சமெடுத்துதண்ணீர்விட்டு குழைத்து கொஞ்சம் கனமாசத்தடவி 2-நிமிஷம் பொறுத்து ஓலையினாலாவது கார்டினாலாவது வழிக்க ரோமங்கள் நீங்கிவிடும்.

இதன் விலை பட்டி 1-க்கு அணா 0 8 0

பொன்னாங்கண்ணித் ஸ்நானத்தைலம்.

இத்தைலத்தைக்கொண்டு வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கண் கைகால் எரிச்சல் தேகக்கொதிப்பு மேகசாங்கை மூளையின் வரட்சி உள்ளங்கை உள்ளங்கால் எரிவந்தம் கண்புகைச்சல் கண்ணை மூடித்திறந்தால் அனலாய் இருத்தல் பீனிசம் நாசியில் நீர்வடிதல் இரத்தம் வடிதல், கண்ணோய், கண்சிகப்பு, பீளைசார்தல், கண் இமை அரிப்பு, காதிரைச்சல் தலைநோய், கிறுகிறுப்பு இன்னும்கண்டத்திற்கு மேற்பட்ட எல்லாவியாதிகளையும்கண்டித்து மூளையைப பலபபடுத்தும் கண்கள் குளிர்ந்து பிரகாசிக்கும் மூளையின் அனலை ஆச்சரியப்படும்படி குணஞ்செய்து உஷ்ணத்தினால் சரீரம் எப்போதும் கதகதவென்றிருப்பதைமாற்றி தேகத்தைக் குளிரப்பண்ணும் மூத்திரச்சூடு மூத்திர எரிச்சல் முதலியவைகளை மாற்றும் இதன் விலை மிகவும் சொற்பம்.

இதன் விலை 4 அவுன்ஸ் டப்பி 1-க்கு ரூபா 1 0 0

முகப்பருக்களுக்கு மருந்து.

அழகிய முகங்களைக்கெடுத்து விகார ரூபத்தைக்கொடுக்கும் பருக்கள் தழும்புக்கள் அதிக வெயிலில் திரிவதால் உண்டாகும் கறுப்பு நிறம் முதலியவைகளைப் போக்கி முகத்திற்கு நல்ல அழகையும்காந்தியையும் கொடுக்கும்.

புட்டி 1-க்கு அணா 0 8 0

உ

ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிராமாடிக் கம்பேனி
மனமோகனரஞ்சித எம். அரங்கசாமிநாயுடு ஆரியகான
கே. எஸ். செல்லப்பாஐயர், கே. எஸ். அநந்த நாராயணஐயர்,
பி. வேலு நாயர், பைரவ சுந்தரம் பிள்ளை, சி. கன்னய்யா,
டி. நாராயணசாமிபிள்ளை, மிஸ். ஜானகி, எஸ். ஆர். கமலம்,
கானமோகன டி. எ. இராஜாமணிமாது,
முதலானோர்களால் நடத்தி வருகின்ற

பார்ஸி சகுந்தலா

சரித்திரம் (டிராமா)

சிவகெங்கை
பேச்சிமுத்துபிள்ளை என்னும் பெயர்வாய்ந்த
மதுரகவி - ஸ்ரீகுருகதாஸ்
அவர்களால் இயற்றியதை



ஸ்ரீமான் வித்வான்,
நாராயணசாமி பிள்ளை
அவர்களால்
அநேக பாடல்களை சேர்த்தும்
நிறைதிருத்தப்பட்டும்

டி. சாரதா புத்தகசாலை தலைவர்,

த. துரைசாமி முதலியாரால்

சென்னை,

புவனேஸ்வரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1927

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

OFFICE OF THE REGISTRAR OF ... 26 APR 1927 MADRAS

0-12 ... 1927

உயர்ந்த பாக்கிட் சினஸ்கோப்

இவைகள் ஜர்மன் தேசத்திலிருந்து நூதனமாய் வரவழைக்கப்பட்டது பயாஸ்கோப் படங்களைப்போல் தயாரித்த சிறுபடங்களை இத்துடன் அனுப்பப் படுகின்றன சினஸ்கோபபில வைத்து பார்த்தால் பயாஸ்கோப்கொட்டகையில் பார்த்துவரும் படங்களைப் போல் தெரியவரும் அதில் யுத்தம், நாடகம் அதிசயம் இன்னு பல் விதமாக மனதிற்கு இன்பத்தைத்தரும் படங்களைபார்த்து ஆனந்திக்கலாம், பயாஸ்கோப்பில் காட்டும் பிலிம்ஸ் படங்கள் தான் இத்துடன் அனுப்புகிறோம் அதற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசமில்லை சினுஸ்கோப் கண்ணாடியும் 40- பலவிதமான படங்களுடன் சேர்ந்த செட் 1-க்கு

விலை ரூபா	0	8	0
ஷை 80-படங்கள் சேர்ந்த செட் 1-க்கு விலை	0	14	0
ஷை 160 படங்கள் சேர்ந்த செட் 1-க்கு விலை	1	8	0

85981

புத்தக விளம்பரம்.

	ரூ.	அ.
வந்தேமாதரம்கதர் துணிபாட்டு	0	1
சீமை துணிக்கும் சதர் துணிக்கும் சண்டை ஜப்பான் துணி சமாதானம்	0	1
துரோபதை வஸ்திரபரணம்	0	4
கிருஷ்ண லீலை	0	4
மகாத்மா காந்தி சுதேசாமிர்தம்	0	4
பழனியாண்டவர்காவடிச்சிந்து	0	4
பார்ஸி சகுந்தலா	0	4
கஜேந்திர மோட்சம் டிராமா	0	4
பார்ஸி லங்காதகனம்	0	3
பார்ஸி கஜேந்திரமோட்ச டிராமா	0	3
பாரிஸ் மதிவல்லப மோகனு	0	3
பாரீஸ் சகுந்தலா	0	3
பாரீஸ் பிர[illegible]தன்	0	3
பாரீஸ் குலேவாபகாவலி	0	3
ஷை இரண்டாம்பாகம்	0	3
பகவத்கீதை வசனம் ராபர் பயி	0	8
ஷை கலிகோ பயிண்டு	0	10
ஷை வசனம் பெரியது	1	8
ஷை சாந்த சுலோசம் தமிழ் அர்	1	0
வி[illegible]மோகனு	0	8
நாஞ்ஜீவவ சக்கட்டளை	0	8
மங்க[illegible]ளை	0	8
ஞ[illegible]சு[illegible]	0	12

	ரூ.	அ.
அல்லிபாதுஷ்ஷா சரித்திரம்	0	4
புல் புல் யான்	0	3
தசாவதாரம் டிராமா	0	8
சாவித்திரி சத்தியவான்	0	4
பாரீஸ் நந்தனார்	0	6
சம்பூரண ராமாயணம் டிராமா	2	8
ஞானசவுந்திரி	0	3
நல்லதங்காள்	0	3
ஷை இரண்டாம் பாகம்	0	3
பார்ஸி அல்லி அர்ச்சுன சரித்திர	0	3
ஷை இரண்டாம்பாகம்	0	3
கோவிலன் கர்ணகி சரித்திரம்	0	3
ஷை இரண்டாம் பாகம்	0	3
சதி அநுசயா	0	3
ஷை இரண்டாம் பாகம்	0	3
குசலவசரித்திரம்	0	3
ஷை இரண்டாம் பாகம்	0	3
சற்குண சாவித்திரி	0	3
பர்மாடாப்புஎன்னுங்நொண்டிசிந்	0	1
சங்கீதபாடவித்தியாபோதினி	0	12
சிதம்பரசுவாமிகள் இயற்றிய உபதேசவுண்மை	0	12
தமிழ்பக்திரசக்கீர்த்தனங்கள்	0	6
முருகன் பாமன் பக்திரசக்கீர்த்	0	5
சரவணபவன் பக்திரசகீர்த்தனம்	0	5
கோபாலகாலா	0	6

டி. சாரதா புத்தகசாலை,
நெ. 23, பாளையப்பன் தெருவு, தங்கசாலை போஸ்டு, சென்னை.

உ

பரமபதி துணை.

பார்ஸி

சகுந்தலா

காப்புவெண்பா.

தாரணியெலாம் புகழும் சாகுந்தலா சரிதை
பேரணியும் நாடகமாய்ப் பேசுதற்கு—நாரணனின்
மாமருகா வேலவனே மைந்தனுக்கு சந்ததமும்
வாமனனே வரந்தந் தாள்வாய்.

விநாயகர் துதி

(கஜமுகநாதா)

ஸ்ரீ கணேசனே சின்மய விலாசனே
சிந்தித்தே னெந்தனைக்காரும் சிவபுரீசனே. (ஸ்ரீ)

ஆகுவாகனா அருளாதி மோகனா
அம்பாதனையா லம்போதரனே உம்பர் தேகனா (ஸ்ரீ)

பின்னதந்தாயா ஓம் பிரணவ ஸ்ரீநேயா
பீஜாக்ஷரனே தேஜோன்மயனே ராஜஸோபாயா (ஸ்ரீ)

ஆறுதாரேசா ஸ்ரீ அங்குச பாசா
நாராயணசாமி போற்றும் ஞானசர் வேசா (ஸ்ரீ)

சரஸ்வதி துதி

(இஸ்ரமதேரஹய்)

வாணி வாக்கருள் வாயே
வாரிஜாக்ஷி வரமருள்வா நீயே
வாக்கருள் வாயே. (வா)

ஏக்கந்தீர்க்கும் பாரதி
என்னம்மணி வாரிதி
எனையாள்வாய் கதி—அம்பா
எனையாள்வாய் கதி—சரஸ்வதி
தனையனைக் கார்
தத்வ மாநிதி (வா)

ஆதிவேத புராணி
ஜோதிஸித்ய கல்யாணி
நீதிதா வாணி—அம்பா
நீதிதா வாணி—சரஸ்வதி
பாதுகாப்பாய் பங்கஜாக்ஷிவேணி. (வா)

பேரானந்த காயத்ரி
மாருமலருள் மித்ரி
வாராய் ப்ரம்ம புத்ரி—அம்பா
வாராய் பிரம்ம புத்ரி—சரஸ்வதி
நாராயண சாமி முத்ரி (வா)

சுப்ரமணியர் துதி

(பசியாலுடல்)

திருமால் மருமகனே தேசிகனே
யறுமுகனே முன்னந்
தென்னிலங்கை ராவணன்றன்
சென்னியைத் தறித்துக் கொன்ற (தி)

வலையா வெகு துலையா யிது
மலையா மிக விலையா குற
வள்ளியுந் தெய்வானை சேரும்
புள்ளிமயி லேறி வாரும் (தி)

வேலா உமை பாலா ஜப சீலா
அநு கூலா அந்தக்
காலனைக் காலாலுதைத்த
நீலகண்டன் புத்ர சித்த (தி)

தேவேந்திரன் சபையில் தேவர்கள் முனிவர்சள் சூழவிருத்தல்.

சபையோர் தரு.

(ஆயிஷதமனி)

தேவ தேவராதியர் போற்றிடும்
தேன் மலர் சாற்றிடும்
தேவேந்த்ர ராஜே வாழ்க (தே)

ஆவலா யடிகள் பணிந்தினமே
ஜீவாதார சித்தம்வை யித்தினமே (தே)

சீலரா தரா செல்வசேகரா
ஸ்ரீக்ருபா கரா
பாவிப்பாய்சுரா பாவையர் புரா
பணிந்தேன் சுந்தரா (தே)

இந்திரன் தரு.

(திரிலோகமும்)

சுர ராதியோர் துதிக்குங் கெம்பீரன்
சூர தீர வீர ஓய்யாரன் (சு)

அரக்கராதி சம்ஹாரன்
அவனியோர்க் குப காரன்
நர ரெவருக்கு மருளு தாரன்
நாகரீக போக தீரன் (சு)

வசனம்.

ஆ ஹா என்ன இது சபையோர்களே இந்த சிம்மாதனம் வெந்தழல் கொண்டிருக்குங் காரணம் யாதோ கவனித்துப் புகல்வீர்களாக.

பிரஹஸ்பதி :—தேவராஜா ! விஸ்வாமித்திரர் செய்யும் கர்னகடூர தவமாகப்பட்டது இவ்வாறு அனல் கொண்டு வீசுகிறது.

தேவேந்திரன் வசனம்.

இதற்கு யாது பரிகாரம் செய்கிறது.

நாரதர் வசனம்.

அப்சர ஸ்திரீகளைக்கொண்டு, அன்னவருடைய தவத்தை யழித்தால்தான் இப்படி அனல்கொண்டு வீசாது. ஆகையால் துரிதமாகத் தானே அனுப்பவேண்டும் இந்திரராஜா.

தேவேந்திரன் தரு.

(பங்கரிமோரி)

அப்சர ஸ்ரீகளே யார் போறீர் சொல்வீர்
தவமே வெல்வீர் (அ)

இந்தப்படி அனல் வீசுதே பாரிடி
அந்தத் தவத்தை யழிப்பீ ரின்னெடி
சுந்தரி மாரே செல்வதார்
சொல்லுவீர் சொல்லு வீர்
வெல்குவீர் நீர் (இ)

மேனகை தரு.

நானே சென்று வாரேன்
நற்றவ மழிக்க
நாதவினோதனே தாரும் விடை
வேதனே செய்யாதீர் நீர் தடை
உடை (இ)

இந்திரன் வசனம்.

ஹே மேனகா! நீ தெரிவித்தபடியே சென்று, அந்த கௌசிகர் புரியும்படியான அகோர தவத்தை கண்ணிமை கொட்டுமுன் அழித்து, ஒழித்து, பழித்து ஓட்டோடியும் வந்துவிடு! இனி தாமதியாதே! மங்கள முண்டாகுக.

மேனகை தரு.

(கரு கோரு கருகய்)

இதோ நானே சென்றுமே வாரேன்
இனி தானே கெடுத்து நலந்தாரேன்
இகழே இலாமல் புகழாகவே. (இ)

மதன உஸாசா மகிழும் சுரேசா
மனமா யனுப்பும் குணமுடன் பாசா (இ)
கவலைப் படாதீர் கருத்தும் விடாதீர்
ககன சுகுண திகிலாற் கெடாதீர் (இ)

இந்திரன் வசனம்.

சந்தோஷம் ஆனல் சீக்கிரமாகத்தானே தவத்தை யழித்து, அவரெண்ணத்தை ஒழித்து, தழைத்திடும் வழியைத் தேடிவா!

(மேனகை போகிருள்.)

(மலைகளடர்ந்த காட்டில்)

விஸ்வாமித்ரர் தவம்.

மேனகை-தரு. (வனஜாக்ஷி)

தவமேனே
தகாது தகாது தானே (த)
தத்தளித்து மேத்தவும் வ
ருத்துதே என் சித்தமது (த)
தயவுபுரிந்து தையலோ டாடி
ஜயமே யடைவீர் சாற்றினே னேடி (த)
சஞ்சல மீறுதே சகித்திட மாட்டேன்
பஞ்சபாணனல் பலதரங் கேட்டேன்
வஞ்சியைக் காத்தால் வதனமும்மீட்டேன்
வனிதையாளை புனிதமாக
தணிக்கச்செய்யும் பனமோகனனே (த)

மேனகை வசனம்.

காருண்ய துரையே! அதோபாரும் அந்த மாரனகப்பட்டவன் தீரமாக, வீரவில்லைத்தாங்கி அபாரமாக மாறிமாறி கணைகளை வீசுகிருன்? என்ன செய்வேன் மனந்தாளவில்லையே! ஆனேன் தொல்லையே. இந்த சமயம் என்னை யாதரிக்காவிடில் ஆபத்து நேரிடும், எனக்

காபத்து நேர்ந்தால், உமக்கும் ஆபத்தே லபிக்கும் ஆகையால் என்னை இச்சமயம் கைவிடாது ;காப்பாற்றுவது உம் கடமையாகும். எதோ துரையே கண்திறந்துதான் பாருமே, என்னைக்கண்டு, என் அழகைப் பார்த்து, என் கோரிக்கைப்படி தீர்த்துவிடும்! இல்லையேல், தீங்கேற் படும் அதனால் யாவத் தவமுங்கெடும், என்னைத்தொடும்! எதோ ஒரு முத்தங்கொடும்! அங்கிகரிக்காவிடில் என் பாவம் சுடும்! சொன்னேன் சொன்னேன். கண் திறவும் காதலா! எதோ இப்படி பாரும் மனந்தே ரும் சமீபம் வாரும்! பாதுகாரும்! வேதை தீரும் பிராணபதி!

விஸ்வாமித்திரர்-தரு-கபரதரஹத்.

சீ செல்லடி
சினந்தாலொழிவா யடி
வனத்தி லழிவா யடி (சீ)

நாச காலியே எந்தன் நற்றவங்கெடுத்தாய்
நலம்புல மறியாது ஞானமும் விடுத்தாய்
பாசமில்ல தென்னுடன் பகையையும் தொடுத்தாய்
பக்ஷம் வைத்து ரக்ஷித்திடேன்
இக்ஷணம் செல் சிக்ஷித்திடுவேன் (சீ)

அடிசண்டாளி சற்றேனு நெஞ்சமஞ்சாது இவ்வளவு துணிபாக வந்து என் தவத்தைக் கெடுத்துவிட்டனையே, இது நலமா தகுமா படுபாவி.

மேனகை-வசனம்.

பிராணபதி இப்படி என்னை தூஷிக்கலாகுமா! நான் தங்களால் போஷிக்கும்படியிருக்க ஒரே அடம் சாதிப்ப தாகுமா! இப்படி வா ரும அங்கு சென்று நம் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்வோம்.

விஸ்வாமித்திரர்-தரு (கடன் காரன்).

விலகி நில் விலகி நில்
விலகி நில் (வி)

வீணாகப் பேசியே
வாணாலழிக்காதே தோஷியே (வி)

மேனகை-தரு.

நலமல்ல சொல்வது ஞானசிரோண்மணி
பலனகைத் தந்திடேல் பாதகமா யினி

விஸ்வாமித்திரர்-தரு.

பாராதே போடி—கிட்ட
வாராதே மூடி
சேராதே நாடி இனி
நீ ருவாய் கேடி

மேனகை-தரு.

நில்லா தெந்தன் ஆவியே
நிமையிற் போகு மேவியே
தொல்லை தீர் குலாவியே
தோகை என் சஞ்சீவியே
வருகுவீர் வருகுவீர்
வாருகுவீர்
வஞ்சியோ டிணங்கிடும்
சஞ்சலந் தீர்த்திடும் (சே)

விஸ்வா:—சட் போ சண்டாளி எட்டநில்

(கண்களை மூடிக்கொள்ளல்.)

(சகுந்தலா ஜனனம்)

துஷ்யந்தன் பிரவேசம்.

தங்கியிருக்கின்ற சர்ச்சனர் யாவருக்கும் என்ற வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ரூபகம்

இந்த சபைதனில் வந்தபெரியோர்க்கே
எந்தன் வந்தனமே
சந்ததம்வேதமுணர்ந்திடுமந்தணர்க்கு மலர்
சாற்றியே பதம்
போற்றியே சிரம்
மேற்றி னேன்

தாசனும்நேசமாய்த்தேசமன்னீசர்க்கும்
வாசன்டேச்சிமுத்தன்மாபதப்பாடியே
வந்தேன்மைந்தனும் (இந்த)

துஷ்யந்தன் வசனம்.

மந்திரியே 55 தேசத்து மன்னர்கள் நமக்குக் கட்டக்கூடிய பகுதியை சரியான டயங்களில் தடையின்றிப் பகுதிகட்டி வருகின்றாரா பகர்வாய்.

மந்திரி-வசனம்.

வேந்தே, 55 தேசத்து மன்னர்கள் நமக்கு அளிக்கவேண்டிய பகுதியைச் சரிவரக்கொடுத்து வருகின்றார்க ளதுவிஷயத்திற் கொஞ்சமேனுங் கவலேவேண்டாம்.

துஷ்யந்தன் வசனம்.

அமைச்சே, நமது நாட்டில்வசிக்கின்ற க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் இம்மூன்றுவருணத்தாரும் அவரவர்களுக்கு ஏற்பட்ட தொழில்களைச்சரியாய் நடாத்தி வருகின்றாரா.

மந்திரி வசனம்.

கொற்றவா! கூறுவேன் அவரவர்களுக்கு ஏற்பட்ட தொழிலையாதொரு குறைவின்றி நடாத்தி வருகின்றார்கள்.

குடிகள் பிரவேசம்

தம்மாரே என்னசெய்வோம் நம்பிமோசமென்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

அண்ணமாரேஎன்னசெய்வோம் திண்ணமாகப்பாருங்கள்
அரசனிடஞ்சென்று நாமு முறையிடுவோம்வாருங்கள்
நேசமுடனிட்டபயிர் நாசமாகப்போனதே
தேசம்விட்டடுத்தநகர் தேடியோடலானதே

சிங்கம்வேங்கைபன்றியொன்று சேர்ந்துமேநற்பயிர்களை
சங்கதியிலாதிங்குவந்து தானழித்தவுயிர்களை
கொன்றுவதைசெய்யவே நம்கொற்றவனிடத்தினில்
சென்றுஇன்றுசெப்பிடுவோஞ் சீக்கிரமாய்வாருங்கள்.

வசனம்

ஹே அண்ணமார்களே, நாமிட்டபயிரை எல்லாமிருகங்களழித்து விட்டதென்று அரசனிடஞ்சென்று தெரிவிப்போமா புவனசக்கரேஸ்வரா! நாங்கள் வெகு காலமா யிட்டிருந்த நெற்பயிர்களை மிருகங்கள் வந்து அழித்துவிட்டது நாங்கள் எவ்விதமாகப் பிழைக்கப் போகின்றோம் மன்னவா!

துஷ்யந்தன் வசனம்.

குடிகளே கவலையுறவேண்டாம் எனக்கு அளிக்கவேண்டிய ஆறி லொருகடமை மூன்று வருடத்திற்கு அளிக்கவேண்டாம் நீங்கள் உங்கள் எதாஸ்தானஞ் செல்லுங்கள் நான் வேட்டை மார்க்கஞ் சென்று அக்கொடிய மிருகங்களை வதைசெய்து வருகின்றேன் செல்லுவீர்கள்.

குடிகள் வசனம்.

மஹாராஜனே அவ்வண்ணமே செல்கின்றோம்.

துஷ்யந்தன் வசனம்.

மந்திரி குடிகள் முறை யிட்டதைத் தெரிந்தீர்களா நல்லது வேட்டையாடச் செல்லவேண்டும் வேடர்களை யதிவிரைவாய் வரவழைப்பீர்.

மந்திரி வசனம்.

பிரபு கட்டளைப்படி இதோ வரவழைக்கின்றேன். ஆரடா சேவகன் சீக்கிரஞ்சென்று வேடர்களை யழைப்பித்துவா.

வேடர்கள்-வசனம்.

பிரபு வந்தனஞ் செய்கின்றோம்.

துஷ்யந்தன் வசனம்.

கல்யாண் வேடர்காள், வேட்டையாட வருவீர்கள்.

வேடர்கள் வசனம்.

அவ்வண்ணமே செல்வோம் ப்ரபு.

துஷ்யந்தன்

காட்டில் வேட்டையாடுதல்

உக்கிரமிக்கத்தக்க பக்குவமாய் வேட்டையாடி என்ற வர்ணமெட்டு.

இராகம்-அடாணு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

கோதண்டந்தன்னிலோர் கோடிகணைகளைபூட்டி-வெகு
கோஷ்டி இந்தக்
காட்டி லுற்ற
குஞ்சரஞ்சிங்கங்கொடுவரியினுயிர்வாட்டி
சூதடாஇந்தமான் துள்ளிப்பதுங்குது
சூரர்களேயோடி வாருங்களிப்போது
காதவழிதூரங் கட்டிவலையது
கக்கறத்தமிக்கணமே பக்குவமாயுக்கிரமித்துக் (கோ)

செங்கெலழித்துமே சென்றமரைகளைத்தானே யின்று
நானே வதைப்
பேனே வேட்டா
சீக்கிறமேபன்றி சென்னியைக் கொய்திடுவேனே
நன்னயமாகவே நாமொன்றுகூடியே
நாடிவிலங்கினை நன்றாகத்தேடியே
இன்னமரைக்ஷணங் தன்னிலேஜாடியே
எட்டுக்கணை-விட்டுப்பலி-யிட்டுப்பொடி-பட்டுக்கெடக் :(கோ)

வசனம்.

வேடர்காள் நாமோ அநேகமிருகங்களை வதைசெய்தோம் இதோ என்முன்னொருமா னதிவேகமாக ஓடுகின்றது. அம்மானைப் பின்பற்றிச் சென்று கொன்று வருகின்றேன்.

வேடர்கள் வசனம்.

ப்ரபு அவ்வண்ணமேசென்று வருவீர்கள்.

துஷ்யந்தன் வசனம்.

ஆஹா நான் மானைப்பின்பற்றி அநேகதூரம் வந்தேன் அம்மானோ கண்களுக்குப் புலப்படாது மறைந்து விட்டது தாகமோ அதியகமா யிருக்கிறது என்முன் ஒருசோலை தோன்றுகின்றது அங்கு சென்று நீரருந்திப் பின்பு என்னுடைய நகரஞ் செல்கின்றேன்.

சகுந்தலா பிரவேசம்

இந்துஸ்தான்.

ஷாஹைறவாலா தோபியாரு
ஸரவர-பரதர ஹைறயாலா
தௌலத்க-ஹஷ்மத்த காத்திரவான்
துதேக்கே நித்தபூலே ஸெமன் தேரு
ஷாஹா உன்னத வர்வாலா. (ஷாஹை)
ஸப்ஸே-ஹால ஹைறசுல்த்தான்
ஸுகுஜஜுசஜிபோ தூதீஷான்
பூராதில்ஹா ஹோகர்மான்
தூதாஹு-தூபிஹு தூதாத்தா
தூஆலா-தூபாலா ஷஹாத்து
பரவர-பரதர-அஹ்ஹறத்கர அனுவர
அப்ஸர-அர்ஹரு பர்ஹர் (ஷாஹை)

வசனம்.

சேடிகாள் நமதுசோலைசென்று என்பிதாவான மஹானுபாவர் கண்ணுவருக்கு பூஜைக்குப் புஷ்பங்கொய்து வருவோம் வாருங்கள்.

சேடிகளுடன்

சகுந்தலா நந்தவனஞ் செல்லல்.

தில்மேஜ தில்பசையாடல் ஹய்ஹுஹின்பன்கே என்ற இந்துஸ்தானிமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

போவோம்வாரீர்சகிகாள் பூங்காவனந்தன்னோடி
ஆவலுடனெல்லோரும் அந்தமாய்நாமொன்றுகூடி (போ)

மல்லிகைமுல்லைரோஜா மருவிருவாட்சிகொன்றை
நல்லமலரெடுப்போம் நங்கையரேபூஜைக்கின்று (போ)

செந்தாமரைசெண்பகம் செழித்தஅலரியுமே
மந்தாரைமலர்கொய்து வந்திடுவோம்நாமே (போ)

வசனம்.

சகிகளே நாமெல்லோரும் பூங்காவனஞ் சென்று மலர்களைக் கொய்து மனமகிழ்ந்து நமது ஆச்சிரமம் வருவோம் வாருங்கள்.

சேடிகள் வசனம்.

அம்மணியேவாருங்க ளதிவேகமாகச் செல்வோம்.

துஷ்யந்தன் நந்தவனத்தைக்கண்டு வர்ணித்தல்.

கொண்டல் நிகர்த்தமலர்க் கொண்டை என்ற வர்னமெட்டு.

இராகம் ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவனம்போலவே நானே
எங்குங்காணேனே (இந்த)

அநுபல்லவி.

கந்தமல்லிகைமுல்லை விந்தையுடனிலங்கு
மந்தரதேவர்கள் வந்து புகழ்ந்திடும் (இந்த)

சரணம்.

வண்டுரீங்கார மோடுபாட வனக்கிளிகள்
கண்டுகளித்து விளையாட

பண்டினிலேயான்செய்த பாக்கியத்தாலே
பார்த்துமகிழ்ந்தேனிந்தப் பாரதின்மேலே
உண்டோயிதனழகை ஓகோயிக்காளே
உரைக்கமுடியாதெந்த னொருநாவினாலே (இந்த)

அண்டாமர்ந்திடவோ மேடை அடுத்திடவே
வெண்டாமரைகளுற்ற வோடை
கண்டவுடனேமனங் கவர்ந்திடுதேயின்னேரம்
கானமயில்களோடு காடைகூவுஞ்சிங்காரம்
துண்டுதுண்டாய்கிளிகள் சென்றுசெடியிலேறும்
சொருசு தனைபெடுத்துச் சொல்லுவேனிதுகாறும்(இந்த)

வசனம்.

ஆகா இந்தச் சுந்தரமான நந்தவனத்தின் விந்தையை எந்தனோர் நாவாலுரைக்கத்தகுமா தகாது? ஆயிரம் பணாமுடியுடைய ஆதிசேடனாலுமுடியாது. பூங்கொத்துகளில் பஞ்சவர்ணக்கிளிகள் கொஞ்சவும் கிளை விளக்கேற்றினாற்போல செண்பகப் புஷ்பங்களலரி நிற்கவும் வெள்ளிக்காளாஞ்சி யேந்துவதைப்போல குடமல்லிகைப்புஷ்பங்கள் புஷ்பித்து நிற்கவும் மத்தள முழங்குவதுபோல இங்குள்ள தடாகத்தின் அலைகள் சப்தமிடவும் அதைக்கண்டு அழகிய கலாபத்தை விரித்துமயில்களாடவும் குயில்கள் பாடவும் அன்னப்பேடையுடன் கூடிவிளையாடும் இவ்வனமானது என்மனதைக் கவர்கின்றது இன்னுஞ் சுற்றிப்பார்த்துப்பின்பு என்னுடைய நகர்செல்கின்றேன்.

துஷ்யந்தன்

சகுந்தலாவைக்கண்டு வர்ணித்தல்

மோகனசிங்காரியடி [illegible]

என்று வர்ணித்தல்.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்.

அந்தரலோகமிருந்து வந்தாளோ இம்மாது
அறியேனே நானிப்போது
அம்புவிமீது ஏது அந்த
அங்கஜன்றேவியாள் ரதிமங்கையோ அல்லாது (அந்த)

சங்கரன்பாரியா ளிவள் தானோ-எந்தனுலே
சாற்றவேமண்ணின்மேலே
சந்தேகமேயிக் காலே ஆசா

சந்திரவத-னமுடைய தையலிவள்மேலே
ஆசைகொண்டுவாடுரேன் அணையவருவாளோ
அட்டிகள் சொல்லுவாளோ
மட்டியேபோவென்பாளோ ஓகோ

ஆதரித்தா-ளாதுஎன்னச்சோதனைசெய்வாளோ
கந்தமலர் தனையெடுக்குங்-கைகளும்நோகாதோ
காரிகையொண்டியேதோ
காரணமாயிம்மாதோ
கானமயில்போலநின்ற கால்களும்நோகாதோ

வசனம்.

ஆகா என்னசிங்காரம் என்ன ஒய்யாரம் இவள் அந்தரலோகத்தி லிருந்து இச்சோலையில் பூக்கொய்யவந்தாளோ அல்லது பார்வதியோ லட்சுமியோ அல்லது பிர்மதேவன் ஈரேழு பதினாலுதேசத்திலுமுள்ள ஸ்திரீகளின் அழகை எல்லாம்பறித்து இப்பெண்ணைச் சிருஷ்டி செய்தானென எண்ணுகிறேன் இவள் பூக்கொய்யுஞ்செங்கரம் நோகா தோ ஆனால் இம்மாதுக்குச் சேடியர்களில்லையோ ஒருவேளையான் வரு வேனென்று சேடியர்களைவிட்டு தனிமையாயிங்கு நிற்கின்றாளோ ஹே மனமே பொறு பதாராதே அடாமன்மதா இனியுன்னுடைய ஆண்மை யை என்னிடங்காட்டுவது ஞாயமா வேண்டாம்சற்றுபொறு நல்லது அவ்வனிதையின் அருகிற்சென்று இன்னாரென அறிகின்றேன்.

தரு (கிட்டவந்து)

இந்த வண்டு பாயுதடி
வந்து வந்து மேயுதடி
சிந்தையை கலக்குதடி
நொந்திட வலைக்குதடி (இ)

என்னசெய்வேன் பயமாகுதே
ஏதடி மனம் நோகுதே
பின்னுடமுடலம் வேகுதே
பேதைக்கே பய மீகுதே (இ)

அடிசகிகாள்—: அருகில் வாருங்களடி! ஏதோ ஒரு பச்சை நிறப் பூச்சி மனதைக்கலக்கச் செய்கிறதே! எங்கே யடி போனீர்கள்! யாரு மில்லையே! ஐயையோ என்ன செய்வேன் பயமாயிருக்கிறதே இது என்ன உபத்திரவம் செய்யுமோ ஒன்றுந் தோன்ற வில்லையே ஐயோ, மறுபடியும் இதோ வருகிறதே;

துஷ்யந்தன் தரு.

(தா நி க ச)

சீ சீ பூச்சியே
சிதைப்பே ஞனிதோ
சீக்கிரம் விட்டு நீ போ
தாக்குவேன் எட்டி நீ போ (சீ)

பேசாமற் போய்விடு
பேதையினுற் கெடு
வாதையாற் பட்டிடு
வாயே சீ சீ கறும் வண்டே போ
நீ யிங்கு தங்காதே வண்டே போ (சீ)

வசனம்.

ஆ ஹா துஷ்ட கறும்வண்டாகப்பட்டது மெல்லிய தோகை யாளை நீ இப்படி அஞ்சும்படி செய்திட்டதே ஹே! வண்டே! இதோ பார் உன்னை என் காலினுல் நசுக்குகிறேன்.

(வண்டு சாகிறது)

ஹே! பெண்மணி உன்னைக் கடிக்க வந்த பூச்சியை நாசஞ் செய்து விட்டேன் இனி நீ அஞ்சாதே! சுகமாயிரு.

சகுந்தலா வசனம்.

அப்பா! அச்சம் தீர்ந்தது. இந்த சமயத்தில் நம்மைக் காத்த மகிபன் யாரோ தெரியவில்லை? சரி இருக்கட்டும். அடி சகிகாள் சகி காள் வாருங்கள் வாருங்கள் எங்கே யிருக்கின்றீர்கள்.

துஷ்யந்தன் தரு

(நாஞசரித்த)

நான் மாதிவளைக் கண்டவுடன்
மையல் மீறுதே
ஐயோ மாறுதே

ஆதரிப்பாளோ யாதோ தோணேன்
அங்கஜாதியால் மனம் பூணேன்

தீதுபுரிவாளோ காணேன்
கோதை வாதை தாளேன்
ஏது நானே மீளேன் (மா)

வசனம்.

நாம் தனித்திருந்தால் பயனேயில்லே! அருகிற் சென்று யாரென விசாரிப்போம் அது தான் சரி!

துஷ்யந்தன்

சகுந்தலாவை விசாரித்தல்

தினயேவும் புனமீதில் பரணேறிக் கவண்வீசும் என்ற

காவடி சிந்து வர்ண மெட்டு.

இராகம்-காப்பி-தாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

அதிரூபவதியேநீ தனியாயிங்குவந்த
தாரடி பதிற் கூறடி உந்தன்
பதியெது கூறுவாய் பாவையேசேரக் கண்
பாரடி மையல் தீரடி

வசனம்.

ஹேபெண்பாவாய்! நீயார் உன்பெயரென்ன நீயிருக்குமிடம் யாது ஒண்டியாக இச்சோலேயில் வந்து பயமில்லாது மலர்கொய்து நிற்கின்றுயே உன்னுடைய வாயைத்திறந்து பதிற்கூறுவாய்.

சகுந்தலா-சொல்.

மன்னவாஎன்பிதா கண்ணுவரெண்ணுவாய்
வல்லவா இன்னுஞ் சொல்லவா இன்று
அன்னவர்பூசைக்கி மலர்கொய்யவந்தேனு
னல்லவா செல்வீர் நல்லவா.

வசனம்.

வேந்தனே! விளம்புவேன், யாதெனில் என்பெயர் சகுந்தலா கண்ணுவரின் புதல்வி அன்னவர் பூசைக்குப் புஷ்பம்பறிக்க இந்தச் சோலையில் வந்தேன் எங்களுடைய ஆச்சிரமம் அதோ தெரிகின்றது பாரும் என்னுடைய வரலாறு இதுதான் சென்றுவிடுவீர் அரசனே.

துஷ்யந்தன் சொல்.

அருந்தவமுடையதோர் கண்ணுவர்சேயென்றாய்
அன்னமே அடி. சொர்னமே பொய்யும்
பொருந்தவேகூறுது புகன்றாயேஉனக்கென்ன
புண்யமே வெகு கண்யமே.

வசனம்.

அடி மாதரசே! உன்னை யான் ஆரென்று கேட்கப் பதிலுரைத்தாய், கண்ணுவ ரிஷியின் புதல்வியென்றனை அவர் துறவியடைந்தவரல்லவா அவருக்குப் புத்திரி இல்லையே நீ பொய் புகலுகின்றாய் அப்படிச் சொன்னபோதிலும் பொருந்தச் சொல்லவேண்டு மல்லவா? அவைகளை நான் நம்பமுடியவில்லை உண்மையை தெரிவிப்பாயன்னமே.

சகுந்தலா-சொல்லல்.

என்னமோபலவாறு யென்னிடம்பேசுகிறாய்
ஏதய்யா இது சூதய்யா இனி
உன்னகர்செல்லுவாய் மன்னவனே ஒழுங்
கோதையா வேண்டாம் வாதையா.

வசனம்.

ஓ ராஜனே! சந்தேகம் கொள்ளவேண்டாம். என் வளப்பத்தைச் சொல்லுகின்றேன் கவனமாய்க்கேட்பீர். யாதெனில், காசிபரின் குமாரனை விஸ்வாமித்திரர் தனது புதல்வர்கள் நூற்றொருவரையு மழைத்துக்கொண்டு ஒருநாள் காட்டில்வந்து வேட்டையாடிக் களைப்புற்றுத் தாகங்கொண்டு வதிஷ்டரைக்கண்டு வணங்க, அன்னவர் மனமகிழ்ந்து காமதேனுவை யழைப்பித்துப் போஜனம் படைக்கச்செய்தனர் விஸ்வா

மித்திரர் முதலியபேர்கள் போஜனமருந்தி வதிஷ்டரைக்கண்டு வணங்கி சுவாமி அடியேனுக்கு இக்காமதேனுவை அளிககவேண்டு மெனக் கேட்க அன்னவர் விஸ்வாமித்திரரைப் பார்த்து பக்தா இக்காம தேனுவை யான் உங்களுக்குக் கொடுக்கப்படாது. தேவருலகத்தி லிருக்கப்பட்டது. அக்காமதேனுவை நீங்கள் கொண்டுபோக வல்லவ ரிருந்தால் பிடித்துச் செல்வீர்க ளென்றவுடன் விஸ்வாமித்திரர் முத லியபேர்கள் அக்காமதேனுவைப் பிடித்தார்கள். அதின் ரோமங்களி னின்று அநேக அஸ்திரங்கள் புரப்பட்டு விஸ்வாமித்திரர் சேனைகளை அதஞ்செய்தது காமதேனு தெய்வலோகஞ் சென்றபின் விஸ்வாமித் திரர் கோபங்கொண்டு இவைக ளெல்லாம் வதிஷ்டனாலேற்பட்டதே யல்லாமல் வேரல்லவென்று தன் புத்திரர் நூற்றொருவர்களோடு சென்று ஹே வதிஷ்டனே உனைக்கொல்லுகிறேன் பாரென்று யுத்தஞ் செய்தார்கள், அவர் தன் கையிலுற்ற தெண்டினால் நூற்றொருவர் களும் மாண்டார்கள், உடனே விஸ்வாமித்திரர் பார்த்து இந்த வதிஷ் டனுக்கு எவ்வளவு பலம் ஏற்பட்டது, தபோபலத்தாலல்லாது வேற ல்ல, நாம் இல்லற வாழ்க்கையைவிட்டுத் துறவறம் பூண்டு கொள்வதே வெகுசிலாக்கியமென்று எண்ணிப் புலித்தோலாடை பூண்டு அங்கு ஐம்புலன்களையும் ஒடுக்கித் தவம்புரிந்தனர். அன்னவர் செய்த தபாக் கினியானது திரிலோகங்களுக்கும் எட்டியது இந்திரன் முதலிய தேவர் கள்கூடி ஆலோசித்து விஸ்வாமித்திரருடைய தவத்தை யழிக்க மேன கையை அனுப்பிவைத்தார்கள். உடனேமேனகை புறப்பட்டு விஸ்வா மித்திரர் தவஞ்செய்யு மிடத்தருகில் வந்து நிற்க அன்னவர்கண்டு மையல் கொண்டு மேனகையோடு சேர்ந்தார். ரிஷிபிண்டம் ராத்தங் காது என்றபடி யான் ஜெனித்தேன் உடனே மேனகை உன்பிள்ளையை வாஙகிக்கொள்வாயென அன்னவர் ஒப்பாது இருக்க என் தாயாகிய மேனகை என்னை அக்காட்டில் போட்டுவிட்டுத் தெய்வலோகம்போனாள். உடனே சகுந்தலைப் பக்ஷிகளென்னைக் காப்பாற்றினதால் சகுந்தலை யென்ற நாமத்தை யெனக்கு வகித்து இதுவரை என்னை வளர்த்து வந்தார். ஆதலால் என்னுடைய பிதாவெனத் தெரிவித்தேனே யல் லாது வேறல்ல, அன்னவரின் பூசைக்காகப் புஷ்ப மெடுக்க இச்சோலை வந்தேனே யல்லாது வேரல்ல, உங்களிடத்தில் மெய் தெரிவித்தேனே தவிற பொய் தெரிவிக்கவில்லை உங்களுடைய எதாஸ்தானஞ் செல் வீர் மரியாதையாக.

துஷ்யந்தனுக்கும்

சகுந்தலாவுக்குந் தர்க்கம்.

நேத்துராத்திரிசென்ற பெண்வீடிது

என்ற வர்னமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

மாரன்வாதையால் நானே சீரழிந்தேனேமானே
மருவிட இதுததி வாராயோ
நேரமேனேகூறுவாய் நேரிழையேஎன்னை
நேசித்தின்றுமே முத்தந் தாராயோ (மாரன்)

ஹே பெண்பாவாய்! உன்னுடைய வளப்பத்தைக்கேட்டுச் சந்தோஷங்கொண்டேன், உன்னைக்காண முந்தின ஜென்மத்தி லருந்தவத்தைச் செய்திருப்பேன், ஆனதா லுன்னை இச்சோலையிற் கண்டேன் ஆனந்தங்கொண்டேன், என்னோடு மனமகிழ்ந்து சேருவாய் மங்கையே, வேண்டாஞ்சங்கையே, பதிலெனக்குக்கூறுவாய்.

சகுந்தலாசொல்-தரு.

தாருமெனவேபின்பு சேருமெனவேசெப்பு
தர்மமீதாகுமோடா தார்வேந்தா
சோரவுனதெண்ணமே மாறுதொருநாளுமே
சுந்தரியிடமாமோ தந்திரமே (தாரு)

வசனம்.

ஹே அரசனே! காணிந்த வனத்தில் மலர்கொய்ய வந்தவளைப் பார்த்து யாரெனவிசாரித்தீர் அதற்குப் பதிலுரைக்கப் பொய் பேசுகின்றுயென்றீர், என்வளப்பத்தை யுரைத்தேன் பின்பு என்னருகில் வந்து சேருவாய் என்றாய், இனிமேல் என்னிடத்தில் வார்த்தை வேண்டாம்.

துஷ்யந்தன்-சொல் தரு.

தந்திரக்காரனேடி சிந்தைமகிழ்ந்துகூடித்
தழுவுவாயிது தகி தையலரே
சந்ததகாலமுன்னைத்தான் பணிவேனே
தையலேமையல்கொண்டு தயங்குறேன்மானே (மார)

வசனம்.

அடிமானே! நான் உன்னிடத்தில் ஒருவிதமான தந்திரஞ்செய்ய வில்லை, மனமகிழ்ந்து கூடுவாய், இதோ உன்பாதத்தைப் பணிந்தேன் இனிமேல் என்னால் மையல் சகிக்கமுடியவில்லை தையலே என்மீது கோபஞ் செய்யவேண்டாம்.

சகுந்தலா-சொல் தரு.

மானே எனவே உந்தன் மனையாளில்லமோடி
மருவியே இருவரு ஒருமனதாய்த்
தானே தையலுடனே சப்ரமஞ்ச மிசையே
தழுவிடு இதற்கு சகியேனே நானே (தாரும்)

வசனம்.

அடா வேந்தனே! கூறுகிறேன்கேள், நீ உல்லாசமாக உன்மனை தேடிச்சென்று உன்பத்தினியோடு மஞ்சமீதேறி மகிழ்ந்து சேருவாய், என்னை யாரென்று மதித்தாய், என் பிதாவான கண்ணுவரிடத்திற் சென்று உரைத்து உன்னை சபித்துவிடும்படியாகச் செய்வேன் ஜல்தி செல்வாய்.

துஷ்யந்தன்-சொல் தரு

உன்னையல்லாது வேறே இன்னில மதிலாரே
உதவிகள்புரிகுவா ருத்தமியே
நன்னயமாக விங்கு நாடிவந்தேனே
நங்கையுன் னங்கையைச் செங்கை யீவாயே (மார)

வசனம்.

அடி மாதரசே! உன்னையன்றி வேறுபத்தினி யெனக்கில்லை, இத தருணம் எனக்கு நீ உதவிசெய்யாவிட்டால் என்னுயிர் போய்விடும்

போலத் தோன்றுகின்றது. என்மீது கருணைசெய்து கலந்திணைவாய் காதலியே.

சகுந்தலா-சொல் தரு.

மன்னவனே உமது எண்ணமும் நடவாது
மார்க்கமுடனே வந்தவழி தேடுவாயே
என்னஉரைத்தும் புத்திக் கேற்கலையோடா
இந்தமோடி செய்யவந்தாய் நிர்மூடா (தாரு)

வசனம்,

அடே! உன்னுடைய எண்ணத்தைச் செப்பினல் நான் ஒப்ப மாட்டேன், இதுவரை யுனக்கு வேண்டிய புத்திகளைப் போதித்தேன் அவைகளைச் சரியென எண்ணாது பலவந்தஞ்செய்கிறாய இனியான் சகியேன், அடா துஷ்டா! எட்டிப்போ

துஷ்யந்தன்-சொல் தரு.

அன்னமே என்னசெய்வே னுன்னிரு செவிக்கே
அடியேன் வருந்துவது ஆகாதா
கன்னல் மொழியா ளுன்னைக் கருதிவந்தேனே
காரிகையேஎன்னைக் கலந்திணைவாயே

வசனம்.

அடி மாது சிரோன்மணி! யிதுவரை நான் உன் சமுகத்தில் வருந்துகிறது உன் செவிக்கேறவில்லையா? உன்மனங் கல்லா, இரும்பா, அவைகளாவது ஒரு காலத்திலிளகிவிடுமே. உன்மனமிளகவில்லையே, மன்மதன் புஷ்பபாணத்தை விட்டு மாரைத்துளைக்கின்றான், மங்கையே மயங்காதென்னோடு வருகுவாய்.

சகுந்தலா சொல்-தரு.

போடா மதுவெறியா பூவை முன்னடி
போதனை செய்யவந்தாய் பாதகனே
மூடா வுனக்குத் தகுமோடா செல்லாதுபேச்சி
முத்தம் தாவென்றுமே கத்தாதே நாயே (தாரு)

வசனம்.

அடா உன்னுடைய போதனை என்னிடஞ் செல்லாது, இனிமேலிவ்விதங் கூறாதே, இதுவரை உன்குற்றம் பொறுத்தேன், இனிப் பொறுக்கேன் கண்ணுவ ரிஷியோ பூஜைசெய்யுந் தருணம் நான்செல்லவேண்டும் உன்னுடைய நகர் செல்வாய்.

வேறு தர்க்கம்.

ஜஸா கர்ஞு வைசாபர்ஞு என்ற வர்னமெட்டு

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

துஷ்யந்தன் சொல்.

வஞ்சியே மையல் மிஞ்சியே வந்தேன்
நெஞ்ச மிரங்காயோ மானே

சகுந்தலா சொல்.

வஞ்சியே என்று கெஞ்சி னில்லாதே
பஞ்சமா பாதகா அஞ்சாமல்

துஷ்யந்தன் சொல்.

பாதகா வென்று ஓதுகிறாயிவ்
வாதுகள் செய்குவ தாகாது

சகுந்தலா சொல்.

பூதல மீதில் மாதர்கள் தன்னிட
காதலி னிறந்தார் கோடி

துஷ்யந்தன் சொல்.

இறந்தாலு முன்னை மறந்திடுவேனே
சிறந்த மோகன ரஞ்சிதமே

சகுந்தலா சொல்.

சிறந்தவ ளென்பதை மறந்திடு கன்னத்தி
லறைந்திடுவே னிங்கு னில்லாதே

துஷ்யந்தன் சொல்.

நில்லாதே என்றுசொல்லாதே மனங்
கல்லாமோ வடி காதலியே

சகுந்தலா சொல்.

பொல்லாதே வசை கல்லாத மூட
னல்லோ யிவ்வழி நாடிவோன்

வசனம்.

அடாபாவியே இதுவரை என் முன்னே நின்று அடிக்கடி புலம்பாதே, நீதியறிந்த அரசனு இருந்தால், தன் தார மின்றிப் பிறர் தாரம் விரும்பமாட்டார்கள் உனக்குக் கொஞ்சமேனும் புத்தி இல்லை.

துஷ்யந்தன் வசனம்.

அடி கண்மணீ இக்காமநோய் தீர உன்னிதழ் மருந்தாகிய சஞ்சீவியை எனக்கு அளித்தால் இக்காமநோய் தீர்ந்து களிப்படைவேன் கண்மணி.

துஷ்யந்தன் தரு

ஜோதூர என்கிற பார்ஸி மெட்டு.

மாதே சோதித்திடாதே
வேதை தீரா யிப்போதே
கோதே நீ யினிவாப்பேதே
ஆதரிப்பாய்தானே னினிமீதே (மா)

அதிருபலாவண்ய மானே
அகதிபோ லலைகிறேனே
ரதிமதனி என் செங்தேனே
ரமிக்கவாரா யினிவாய்தானே (மா)

துஷ்யந்தன் வசனம்.

அடிமாதே எனக்கு வாய்த்தமாதே தடை சொல்லாதே இல்லையிடில் என்னுடைய ஆவி ஒருகண நாழிகை நில்லாது, அப்பாவத்தை நீ ஏற்றுக்கொள்ளாதேயடி.

சகுந்தலா வசனம்.

அடம் விட்டிடு புத்தியில்லாது என்முன் கிட்டியே அநேகவிதமாகப் பிதற்றுகிறாய், இனித்தாளேன், வீணாக நீ மடிந்துபோகாதே! உன் நகர் செல்லுவாய்.

வேறு தர்க்கம்.

ஏஞே உனக்கிந்த அடம் என்ற வர்னமெட்டு

துஷ்யந்தன் இராகம்-நவரோஸ் தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வாடிகண்ணுட்டி மோடி ஏன்
தேடிப் பஞ்சணையில் நாடி
நாடி பதம்பாடி விளையாடி மலர்சூடி வாடி (வா)

வசனம்.

அடிகண்மணி நானுனக்கு என்னகுற்றத்தைச் செய்தபோதிலும் அக்குற்றத்தை மன்னித்து என்மீது பரிபூரண கிருபைசெய்வாய் அடிக்கடி யுன்னிடத்திற் கூறியிருப்பது சரியல்ல அன்னமே.

சாகுந்தலா சொல்.

மூடா நீசெய்யாதே வாது
போடாமுன்னில்லாதிப்போது என்முன்னே
போதனையாகாதுகோறி சூதுசள்செய்யாதேவேசாரி (மூடா)

ஓப! வேந்தனே இவ்வளவு நாழிகையாய் என்னேடுபேசிச்சேரென்கின்ருய் அடா முடவன் கொம்புத்தேன்மேல் இச்சைவைத்தது போல நினைக்கின்ருய் உன் எண்ண மிங்குசெல்லாது செல்.

துஷ்யந்தன் சொல்.

பாவியுன்னுலென் ஆவி
தாவிசோறுதே மேவி
தந்துமே நீ எந்தனையே வந்துமே யிணங்கிடாயே (வாடி)

வசனம்.

மடமயிலே உன்மேல் மையல்கொண்டு வாடுகின்றேன் இக்கணத்தில் என் மனதைத் திருப்தி செய்தாலுனக்கு வெகுகோடி புண்ணியமடி.

சாகுந்தலா சொல்.

சூதுவாது ளாகுமோ
பாதகா ஜாலு மாகுமோ
பாவை என்னை மேவிடாதே தேவையில்லை போவாயினி (மூ)

வசனம்.

ஓய் புத்தியில்லாமல் என்னைமிரட்டிப் பலவந்தப்படுத்தலாமென்ற எண்ணத்தோடு இங்குகிட்டிவந்தாயோ அதற்கு யான் இடங்கொடுக்க மாட்டேன் சென்றுவிடுவாய் துஷ்டா.

சாகுந்தலா சொல் வசனம்.

வேண்டாம் வீணில் கெட்டுப்போகாதே பெண்ணால் மாண்டு போனபேர்கள் அளவிடமுடியாது அவர்கள்போல் நீயும் மடிந்துபோக வேண்டாம் மரியாதையாகப்போய்விடு.

தர்க்கம்.

நின்னு நம்மிநாவு நீரஜான நேத்ரா என்றவர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

துஷ்யந்தன் தரு.

வஞ்சகனும்மாரன் வாதைமிகக்கொண்டேன்
சஞ்சலந்தீர்ப்பாயே சந்தோஷமாய்க்கண்டேன்

சகுந்தலா தரு.

இத்ததிதகாது ஏகும் வந்தவழியே
சித்தமீறி என்னை நத்தினால் வரும் பழியே (வ)

துஷ்யந்தன் தரு.

அட்டி நீ செய்யாதே ஆவல் தீரிப்போதே

சகுந்தலா தரு.

கிட்டிவந்தபேதே எட்டிநில்லினிமீதே (வ)

துஷ்யந்தன் தரு.

கல்லோ உன்மனமே காதல்தீரினமே

சகுந்தலா தரு.

நில்லாதேயித்தினமே நீயேகுமங்கனமே (வ)

துஷ்யந்தன் தரு.

அன்னமேசெக்கதேனே அருகேவாராய்மானே (வ)

சகுந்தலா தரு.

என்னுமேலேமேடிவாய் ஏதுவாய் நீ தானே

துஷ்யந்தன் தரு.

எந்திழையேவாராய் என்னுவலைத்தீராய்
காந்திமதிவாராய் கருணைவயினிநேராய் (வ)

சகுந்தலா தரு.

முடியாதே ஏமாற்ற மூடத்தன மேனோ
விடுதகிப்போநீதானே விபரீதம்வரும்தானோ (வ)

துஷ்யந்தன் தரு.

வாராது அநீதம் மாதேஏனோ பேதம்

சகுந்தலா தரு.

பாராதே என்னையே பழிதீர்த்தால்விநோதம் (வ)

துஷ்யந்தன் சொல்.

மாதர்க்கரசி மஹாராசி கன்னேசி விஸ்வாசி விளம்புவேன் கேளடி என்னோடு வாதாடுவது நீதியா நானிதுவரை வருந்திக்கேட்டு உன்மன மிறங்கவில்லையே மனமகிழ்ந்து என்னையாதரி மங்கையே.

சகுந்தலா வசனம்.

ஹே அரசே! சோலையில் மலர்கொய்யவந்த மாதைக்கண்டு பலாத்காரஞ் செய்வது ராஜர்களுக்கு நீதியா இது அடுக்குமா (மனதுக்குள்) ஆனால் இந்தச் சுந்திரபுருடனைக் கண்டவுடன் எந்தன்மன மிகுத குதூஹலமடைகிறது இம்மன்னனோடு சேர்வோமா ஒருவேளை பிதாவானகண்ணுவர் சித்தமெப்படியோ நல்லது இம்மன்னவனை யாரென விசாரிப்போம் (வெளிப்படையாக) ஹே வேந்தே உமது நகரமெது இங்குவரவேண்டிய காரணம்யாது.

துஷ்யந்தன் வசனம்.

ஹே மாதுசிரோன்மணி! கவனிப்பாய் நானிருப்பது அஸ்தினுபுரம் என்பெயர் துஷ்யந்தன் கானகத்தில் வேட்டையாடிக் களைப்புற்று இங்குற்றேன் உன்னைக்கண்டு மையல்கொண்டு வருந்திச் சோர்வு

யென் பேலகிருமாகத் தூஷித்தாய் ஒரு சமயம் இவளோடு சேர்ந்தால் கைவிட்டுச் செல்வானென்று எண்ணிக்கொண்டாயோ அவ்விதமெண்ணாதே.

துஷ்யந்தன் சொல்

என்னவேணுங் கேளடி யீருவேனன் என்றவர்ளமெட்டு

இராகம்-தேசிகதோடி—தாளம்-ரூபகம்

பல்லவி.

சத்தியஞ் செய்வேனனின்று
சரசியுன்னைமறவேனென்று (சத்தி)

அநுபல்லவி.

உத்தமியே சித்தஜனல்
மெத்தநொந்தே னிர்த்தநிமேல் (சத்தி)

சரணம்.

எந்தனரசு தாரேன்
சுந்தரி எந்தனவல்தீர்
அந்தமொடு வந்திணைவாய்
சிந்தைமகிழ்ந் தெந்தனைப்பார் (சத்தி)

வசனம்.

அடிபெண்பாவாய் இந்தவேளை வந்திணைந்தால் அதில்ஜெனிக்கும் புத்திரனுக்கு எந்தன் நகரை முடிசூட்டிவைக்கின்றேன் உன்னைப பட்டமஹிஷி யாக்குவேன் உன்னையன்றி வேறுமடவார்களைப்பாரேன் இது சத்தியம் சத்தியம் சத்தியம்.

சகுந்தலா வசனம்.

ஹேகொற்றவா! தங்கள்மனைதை யிதுவரை பரிசோதித்தேனே யல்லாது வேறல்ல ஆடவர்கள் ஸ்திரீயைக்கண்டு அவள்மீதுற்றகாதலால் நாடுநகர் கொடுக்கின்றேனென் உன்னை யெப்பொழுதும் மறக்கமாட்டேனென்று சொல்வது வழக்கம் காரிய முடிந்தவுடன் கைதவர விடுவது ஆடவர்களுக்கு வழக்கமா யிருக்கின்றன அரசே.

துஷ்யந்தன் வசனம்.

அடி கண்மணியே அவ்விதமென்னுதே உனக்குச் ஜனித்த குழந்தைக்கே பட்டங் கட்டிவைப்பது நிட்சயம் மனமகிழ்ந்து சேர்வாய் மங்கையே.

தீனஆபாபஹாரஹா பீரோஜவாகுவே என்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

துஷ்யந்தன் சொல்.

அடிவாடி நீயோடியே மங்கையே யின்னமென்னமோடியே
மோடியே மோடியே மோடியே நாடியே (வா)

சாகுந்தலா தரு.

ஓடிவாராய் நீசேராயோ மையலைத்தீர்த்து முததந்தாராயோ
தாராயோ தாராயோ தாராயோ இங்கெனைப்பாராயோ (வாராய்)

சாகுந்தலா வசனம்.

பிராணகாந்தா வாரும் கொடிவீட்டிற்குள் செல்வோம்

துஷ்யந்தன் வசனம்.

அடிமாதர்க் கரசியே வழுத்துவேன் கேள் யான் என் நகரஞ் சென்று என்னுடைய சேனு சைனியங்களையும்மந்திரியையும் இவ்விடம் அனுப்பி என்பதிக்கு அழைத்துவரும்படி செய்கிறேன் யாதொன்றுக்கும் கவலைப்படவேண்டாங் காதலியே.

சகுந்தலா வசனம்.

ப்ராணேசா தங்களைப் பிரிந்து இங்கு எவ்விதம் தனித்திருப்பேன் தாங்கள் இந்த சமயம் கைவிடலாகுமா?

துஷ்யந்தன் வசனம்.

மங்கையே யான் உன்னை ஏமாற்றினேனென்று நினைக்கவேண்டாம் உன்பிதாவான கண்ணுவருக்குத் தெரியாது அழைத்துச் செல்லுவது உசிதமல்ல! யான்பதிக் கேகினவுடன் சத்தியமாக வுன்னை அழைப்பித்துக் கொளுகிறேன் சென்றுவர விடையளிப்பாய்.

சாகுந்தலா வசனம்.

ஆனாற் சென்றுவருவீர் வந்தனஞ் செய்கின்றேன் கூடிய சீக்கிரம் வந்தழைத்தேகுவீர்.

துஷ்யந்தன் வசனம்.

கல்யாண் காதலி களிப்பாகவேயிரு கவலைப்படாதே!

மாடவியன் வசனம்.

பிரபு மகராஜ்! இனியாவது நம் நகர் போகலாமா! தடையில் லையே.

துஷ்யந்தன் வசனம்.

இல்லை! வா! அதிகமாய் வார்த்தையாடாதே! சீக்கிரமாகப் போக வேண்டும் இனிதாமதிக்கக் கூடாது, நிற்போமாகில் மாது ஸ்ரீ அம்மாள் சினமுறுவர்கள்! அதனால் நமக்கு கவலையே யுண்டாகும், நமக்காக யார் யார் காத்துக்கொண்டிருக்கிறாரோ அதற்காகவே இப்போது செல் ல வேண்டுமென்று என் மனம் வற்புறுத்துகின்றது.

மாடவியன் வசனம.

ஏன்! இன்னும் சிறிதுகாலம் இங்கனேயிருந்து, புத்திரகளத்ராதி சஹிதமாக வந்தால் நன்மையாக யிருக்குமென்று என் மனதிற்றோணு கின்றது. ஆதலால் இன்னும் சிறிது நாளிங்கிருந்து வேடிக்கையாக வே பிறகு போகலாமே ப்ரபு

துஷ்யந்தன் வசனம்

சட்பேசாதே! மாடவியா! என்ன விஷபம் ஏதேதோ மனதிலெ ண்ணி இப்படி வார்த்தையாடுகின்றாயே. வா! போகலாம்! வீண்கா லம் போக்காதே! புறப்படு.

மாடவியன் வசனம்.

இதோ! நான் தயாராய் விட்டேன் வாரும் போவோம்.

சகுந்தலா துஷ்யந்தனை நினைந்துபுலம்பல்

ஆயேசையான் படுயேதோரே பையான்

என்ற வர்னமெட்டு,

சகுந்தலா தரு.

தோழிமாரே	தோணிடேனே துந்தானே
தோகைமனங்	தாளேனே (தோ)

நாழிகையொரு யுகமாகிறதாண
நங்கையும் வாடுரேனே துன்பங்காண
நாதனும் வரவில்லை
பாதகியானேன் தொல்லை
பதறுதுடல் சிதறுதுறம்
அதிருபனல் கதறுகிறேன்மேல் (தோ)

வசனம்.

ஆ சகி நான் என்னசெய்வேன் என்மன்னனன துஷ்யந்த பூபதி என்னைக் காந்தர்வ விவாகம்புரிந்து வேண்டிய புததிக ளுரைத்து என்னகர் சென்று உன்னையழைத்து கொள்கிறேனென்று போனவர் வாரங்களாகி மாதங்களாகின மாதங்களாகி வருடங்களாகின இன்னம் அவர் வரவில்லை அல்லது ஒருசமயம் என்னை மறந்தனரோ ஒன்றுமறிகிலேன் சகி என்னசெய்வேன் தெரிவிப்பாய்.

சகிவசனம்.

அம்மணி மயக்கவேண்டாம் ஒரு சமயம் தங்களை மறந்திருக்க வேண்டும் ஏனெனில் அரசர்களுக்கு பலஞாபகமுண்டு இப்பொழுது அவ்வரசனுக்குக் கடிதமெழுதுவாய் அதன்பின்பு யோசித்துக்கொள்வோம்.

சகுந்தலா வசனம்.

சகி நல்லயோசனை தெரிவித்தாய் பல ஞாபகமாதலால் என்னை மறந்துவிட்டார் ஆகையால் என் பிதாவுக்கு தெரிவித்து என் பிராணதுரையிடம் போவதே நலமல்லவா.

தோழிகள் வசனம்.

ஆம் சகுந்தலா அது உசிதந்தான்,

கண்ணுவர்கள் வசனம்.

சிஷியர்களே! என் புத்திரி சகுந்தலாவை அவள் புருஷனுகிய துஷ்யந்தமகாராஜனிடம் விட்டு வாருங்கள்,

சிஷர்கள் வசனம்.

மகா பாக்கியம் சுவாமி! தாங்கள் தெரிவித்தபடியே சென்று விட்டு வருகிறோம்.

கண்ணுவர் வசனம்.

அம்மா சகுந்தலா! நீ உனது கணவரிடம் போய் சுகமாய் வாழ்ந்திரு! கவலைப்படாதேயம்மா! மங்களமுண்டாகுக சென்றுவா புத்திரி.

சகுந்தலா வசனம்.

நமஸ்காரம் பிதா! சென்று வருகின்றேன்

ஸீன் தர்பார்.

துஷ்யந்தன் அஸ்தின புரியில் தர்பாரிலிருக்கும் சமயம் சகுந்தலா போய் நமஸ்கரித்தல்.

துஷ்யந்தன் - தரு.

பூரிகல்யாணி - ரூபகம்..

ஹரஹர மஹாதேவ சங்கரா உமது
அடிகளை மறவேன தற்பரா
முடி குனிந்தேன் கங்காதரா (ஹர)
பரப்ரம்ம சொரூப பஞ்சாக்ஷரா
பாலித்திடு சீலத்துடன்
மேலாகம நூலா தரா (ஹர)
நாராயணசாமி சிவமே
நாளுமெனைக் காரும் மாதவமே
தீராயிடர் நாடாமல்
தினம்தினம் கார் பாரில்
திரிபுர சுந்தரா திகம்பர மூர்த்தியே
பரிபூரணமாய் வரமருள் கீர்த்தியே (ஹர)

மந்திரி:—நமஸ்கரிக்கிறோம் பிரபு மகாராஜா!

துஷ்யந்தன்:—மங்களமுண்டாகுக மந்திரி எது மனமாகப் பட்டது ஓர்வித குதூஹலத்தையும் உற்சாகத்தையும் தருகின்றது யாது காரணமோ தெரியவில்லை இடது புஜமும் துடிக்கின்றது.

மந்திரி:—மகாராஜ்! நற்குறிதான் ஏதோ சுபகரமாகத் தோன்றுகிறது.

துஷ்யந்தன்:—அப்படியா! சரி! பார்க்கலாம்.

சகுந்தலா - தரு.

எலரா நாபை சாஹஸரா மோஹமு என்ற வர்ணமெட்டு.

பாதமே வந்தனமே
பாவை பணிந்தனமே (பா)
ஆதரிப்பீரே பிராண
நாதாமறை வேதா திரு (பா)
மன்னாதி மன்னர்கள் மகிழ்ந்திடு மென்துரையே
பொன்னடி மறந்திடேன் போகா எந்தனிரையே (பா)
காருண்ய மனோகரா சார்ந்துநும் நான் கதி
கோரிவந்தேனென்றவ தாறுசெய்யாதீர் பதி (பா)

வசனம்.

நமஸ்கரிக்கிறேன் பிராண துரையே! தங்களுடைய நாயகியாகிய என்னை ஆதரிக்க வேண்டும் தயாநிதி பிராணபதி.

துஷ்யந்தன் - தரு.

ஜமூலகுதரக்கே சிபேஷீயார்.

ஆரடி நீ எவ்வூரடி உந்தன்
பேரைப் புகல் புகல்
பாரில்வந்த படு நீலியோ
பத்தாவென்ற நாக்க
றுத்திடுவேன் இனி இனி இனி (ஆ)

சகுந்தலா - தரு.

பாவையும் தேவிதான்
ஆவலாய் மேவினேன்
கோவே காத்திடும் நாயகா

துஷ்யந்தன் - தரு.

கோதையே பொய் யோதிடாதே
பூதலத்தில் நம்பொ
ணுது பாவி உனே உனே உனே (ஆ)

வசனம்.

சண்டாளி! நீ யாரோ, கேவலம், எங்கேயோ யிருந்து திடீரென்றுவந்து என்னை பிராணநாயகா அடியாள் உமக்கு பிராண நாயகி தான் என்று கூறுகிறயே என்ன தைரியமடி உனக்கு! நாசகாலி!

சகுந்தலா - வசனம்.

துரையே! தாம் பிராணபதியாக யில்லாவிட்டால் இவ்வளவு தைரியமாக, தங்களை வந்து அழைப்பேனே! தாங்கள் என்னைக் கவனிக்காமற்படிக்கு இப்படி சொல்வது.

தரு.

ஆறுமா உன்னலே நான்பட்ட.

ஆறுமா என்மனதை நோகச்செய்தால் வீண்
பேருமா ஐயையோ (ஆ) நீதுமக்கு (ஆ)
ஆகா வேதின்றி
யோதலா காது மன்னு (ஆ)

கஜல்.

காதலாகநீர்வந்து கண்ணுவர்சோலையிலென்னைக்கண்டீரே
மாதுமேல்மோகமாகி மறந்தீரேகாந்தர்வமாகக்கொண்டீரே (ஆ)

துஷ்யந்தன் தரு.

விலகி நில்லடி வீணில்வழக்காடலாமா விபரீதமாக
மானங்கெடநீ செய்யாதே மனமதுநோக
மாபாவிசண்டாளி சீபோடிஜகஜாலி
தாபமில்லா நீலி நீபண்ணுதேகேலி நிர்மூடி செல்லடி

சகுந்தலா கஜல்.

மன்னவாநீர் வேட்டையாடி வந்துமேஎன்னைபலவந்தம்செய்தீரே
இன்றதைமறந்தீரோ என் இறைவா ஆதரித்தருள்வீரே

துஷ்யந்தன் தரு.

அகங்காரிப்போ
அச்சம் நாணம் யாவும்விட்ட அகங்காரியே
நிச்சயம் நானுன்னைக் கண்டதில்லை வீரியே
நின்றபேசிடாதே நன்றியில்லாபேதே
குன்றிடுவாயிப்போதே இன்றுசெய்யாதேவேதே
நிர்மூடி செல்லடி (அ)

சகுந்தலா வசனம்

பிராணபதி! சகல மன்னர்கட்கும் அதிபதியாகிய தாங்களே இப்படி பொய் கூறினால் நானென்ன செய்வது! நானோ பெண் அதிலும் பேதை! அநாதை! என்னை ஏமாற்றிவிட்டு வந்ததுமன்றி வீண் வார்த்தையாடுகின்றீரே! என்னை பூஞ்சோலையிற் காந்தர்வமணம் புரிந்து வந்து இப்படிப்பேசுகிறீரே! இது தர்மமா!

துஷ்யந்தன் தரு.

என்னடி நீபடுநீலி என்ற வர்னமெட்டு.

ஆடிகட்டினர் தாலி இந்த
அதிபனைச் செய்யாதே கேலி முன்பு
கூறடி நீபடு நீலி சீ சீ
குணமில்லா நீ ஜகஜாலி

சகுந்தலா - தரு.

பான்குதரியான் என்ற வர்னமெட்டு.

எந்தன் துரையே எந்தன்துரையே
இப்படிநீர் பேசுவது ஒப்பாது யார்க்குமிது (எ)
என்னையிக்கதி விடவா
மன்னுவானீர் கெடவா (எ)

துஷ்யந்தன் தரு.

கதறுதே சீசீ இப்போது என்னைக்
கண்டதாய்ச் சொல்லத்தகாது இந்தப்
பதட்டம் செய்தாலினிமீது கொல்வேன்
பாவையே யுனைப்பார்த்ததேது (ஆ)

சகுந்தலா - தரு.

மோசமாகுமா மோசமாகுமா
மொழிவ திப்படியானால் பழிநேர்ந்திடுமேமென்மேல் (மோ)
பாச மென்மேல் வைத்து
நாசஞ் செய்தீர் யோசித்து (மோ)

உலகத்தை யாளப்பட்ட மன்னவரா யிருந்தும் இப்படி மாறி வார்த்தையாடி மிரட்டுகின்றீரே! இப்பேர்ப்பட்ட அநீத அரசரென்று முன்னமே தெரிந்திருக்குமாயின் உம்மை கவனியேனே! ஐயோவீணில் என்னைக் கெடுத்ததுமன்றி கேலிக்கிடங்கொடுத்தீரே பேஷ் அநீதியாகாது அரசரே!

துஷ்யந்தன் - வசனம்

சட் பேசாதே! உன்னை எப்போது கண்டேன் எப்போது மணம் புரிந்தேன்? இராஜ சபையிற்றே யெனபலவந்தம் செய்யவா வந்தனை! பேஷ் பேசாமற் சென்று விடு, புரட்டுக்காரி ஆஹா பெண்களை நம்பப்போகா தென்பது உன்னால் நன்குணர்ந்தேன் போடி.

சகுந்தலா தரு கானடா-ஆதி.

இதுஞாயமா இப்படிகெடுப்பதுமக் கிதுஞாயமா (இ)
தப்புமொழியாலித்தினம் தாங்குமோசிம்மாதனம்
ஒப்பாதுதர்மமல்ல வையும் மனம் (இ)
காசினிவிண்ணறிய கைபோட்டுதந்தீரே
மோசம்செய்ய முன்வந்தீரே (இ)
பெண்பாவம்பொல்லாது பெருமைகுன்றும்நில்லாது
மண்ணில் பொய் மொழி செல்லாது (இ)
தர்மமல்ல கெடுப்பது தகாது பொய் தடுப்பது
கர்மம்நேரும் கை விடுப்பது (இ)

வசனம்.

பிராணபதி! பெண்பாவம் பெண்தோஷம் என்று கிஞ்சித்தேனும் உணரவில்லையே! இந்தகைய சபையில் மனையாட்டி வந்து பகிரங்கமாய்ப் பேசுவதற்கு விடலாகுமா! பிராணபதி! அங்கீகரியும்! ஆதரியும்! பெண்ணென்றால் பேயுமிரங்குமே! தம்மனது இரங்கவில்லையே சற்றேனும்? என்னை ஈன்றெடுத்தாயே! ஆகாயவாணி பூமிதேவியறிய

சத்தியஞ்செய்துகொடுத்து கந்தர்வ மணம்புரிந்து என்னை ஏமாற்றி இங்கு அரசு புரிகின்றீரே? இந்தப் பேதை! அனாதையாகிய என்னை ஆதரிக்கலாகாதா! தெய்வம் தான் சதி செய்தது, நீயுங்கூடவா அப்படி யிருக்கிறாய்! நீயாவது வந்து என்னை இது சமயம் காப்பாற்றா விடில் உயிரிழப்பேன் இது சத்தியம்.

மேனகை-வசனம்

வத்ஸயா! கவலைப்படாதே! வா செல்வோம் அந்தரம்போவது

துஷ்யந்தன்- தரு

கானகத்தில் நாமலைந்து கதற விதிவசமோ
என்ற வர்ண மெட்டு

என்ன நான் செய்வேன் சகுந்தலா எங்கு தேடுவேன் தேனே
அன்னமே வீணையுன்மீது அபவாதமாய்க் கூறினேனே
தன்னந்தனியாய் நின்றேனே தையலே வருவாய் மடமானே (எ)
மகிமையை யறியாமல் நானே மாதரசி உனை வெறுத்தேன்
அகிலத்தில் உன்னை எங்கென்றுஅறிவையே நான் தேடுவேன் ()
உத்தமி நீ வந்தறிந்தேன் உடனே உன்னை நான்மறந்தேன்
பத்தினிவாக்கை தெரிந்தேன் பழுதாகியே மூச்செறிந்தேன் (எ)

ஆ கண்மணி! உன் மகிமையை யறியாமற் போனேனே! மாதரசி கற்பரசி என் குற்றத்தை க்ஷமித்து என் முன் வந்திடேன் ஆ! சகுந்தலா! சகுந்தலா!

செப்படவன் கடலில் வலைபோட ஓர் மீன் அகப்பட, அதன் வயிற்றில் ஓர்கணையாழியிருக்க, அதை வியாபாரியிடம் விற்கவருகிறான்

செட்டி வசனம்.

ஓரே பின்னவாடா! ஏமிரா நேடிகி, ஒக பேரமுகூட ராலேதே! சாலா கஷ்டமுகா உன்னதிரா! அதிகோ! எவுடோ வஸ்தாடு, ஜாக்ரதகா உண்டு (மஞ்சிதி).

செப்படவன் - தரு.

ப்யாரிமோரி ப்யாரி என்கிற பார்சி வர்னமெட்டு.

செட்டியாரே பாரையா இம்மோதிரத்தை
செட்டியாரே பாரையா
பாரையா பாரு தீரையா விலையே
ஜோராகபொன்னை தாதா ஜல்தி
ஜோராக பொன்னை தாதா சீக்ரமாக (செ)
தந்திட்டால் சீக்கிரம் தான் சாப்பிடப் போரேன்
தாதா ஜல்தி பொன் தாதா இம் மோதிரத்தை (செ)

கள்ளு குடிக்கணும் கருவாடு தின்னணும்
மெள்ளத் தார தீரையா செட்டியாரே
பாரையா செட்டியாரே பரிவாக நேரே நீரே (செ)

சேவகர் வசனம்.

அடே! செம்படப்பயலே எட்டிநில்லடா! இதேது உனக்கு எங்கு திருடினையாடா! மெய் சொல்லு.

செம்படவன் வசனம்.

ஐயா என்னை ஒன்றும் செய்ய வேண்டாம் விட்டு விடுங்கள் என்னால் சேகரித்த பொன் யாவும் தருகிறேன் என்னை விட்டு விடுங்கள்.

சேவகர் வசனம்.

அடே மீன் பிடிக்கும் பயலே! இதை எங்கே திருடினைவாடா இப்படி எங்கள் அரசன் முன்பு!

செம்படவனை துஷ்யந்தன் முன்விடுகிறார்கள்.

சேவகன் வசனம்.

மன்னாதி மன்ன நமஸ்காரம் இந்தக் கணையாழியைத் திருடி வந்து கடையில் விற்கப்போனான் அது விஷபம் நாயகளறிந்து பிடித்து வந்தோம் பாரும் வேந்தர் பெருமானே!

துஷ்யந்தன் தரு.

கபாதரஹத் என்ற வர்ணமெட்டு.

ஏதடா பயலே
இந்த மோதிர முன்கையில்
வந்தகாரண மென்ன (ஏ)
சூதாக எங்கனம் சூழக்கவர்ந்தனே
ஓதுவாயுண்மையை ஒளியாதேமுந்தினே
வாதாடி எவ்விடத்தில்
வழிமறித்து தந்தனே
வழுத்துவாய் சீக்ரமாக
வைத்திடாதே நீ சந்தேசம் (ஏ)

அடே ஒளியாமற் றெரிவிப்பாயாகில் நிரம்பப்பொன் தருகிறேன் மெய் மொழி கூறு.

செம்படவன் வசனம்.

மகாராஜா! நான் சமுத்திரத்தில் வலை வீசினேன் ஓர் மீன் அகப்பட்டது, அதின் வயிற்றிலிருந்து இந்த மோதிரம் அகப்பட்டது இது சத்தியம்! பொய்யல்ல சுவாமி மகாராஜா சாப்பாட்டுக்கு வேணுமே அதற்காக இதை விற்கப்போய் அகப்பட்டுக்கொடேன் இவ்வளவுதான் சாமி எல்லாம் நிஜம் என் ராசாவே.

துஷ்யந்தன் வசனம்.

சரி! இவனுக்கு வேண்டிய அளவுபொன் கொடுத்தனுப்புவாயாக இவனை விட்டு விடுங்கள்.

தரு. (ஸேமா துள்ளறு)

சகுந்தலாவைக் காணாமலே தயங்கி வாடுறேன் (ச)
அகிலத்தில் முன்பின் யோசியாமல் அவமதித்தேனே
சுகவதி எங்கேகினளோ துயரடைந்தேனே (ச)
எங்கென்று நான் தேடுவேன் ஏதுந்தோணேனே
செங்கமலப்பூஷணியைத் தேடிப்போரேனே (ச)

ஐயோ! இந்தப் பாதகனை எவ்வளவோ பலவிதத்திலும் சோதித்து கடைசியாக. இணங்கினளே! அதுவுந்தவிர என்னிடம் சத்திய வாக்கும் பெற்றுக் கொண்ட பிறகுதானே நம்பினள் அப்பேர்க்கொற்ற மடந்தையின் மனதைக் கெடுத்தேனே! விடுத்தேனே கணையாழியும் கொடுத்தேனே! ஐயோ சண்டாளன் அப்பேர்ப்பட்ட காதலியை வெறுத்தேனே! மறுத்துத் துரத்தினேனே ஆ சகுந்தலா சகுந்தலா! உன்னை மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் எதோ என் முன்னதாக வாயேன்! ஆ கண்மணி சகுந்தலா!

மஹரிஷி ஆசிரமத்தில் சகுந்தலாவும் தன் குமாரன் சர்வதமனனாகிய பாதன் சிம்மத்தோடு விளையாடின வண்ணமாயிருக்க

துஷ்யந்தன்-வசனம்.

ஆஹா என்ன அற்புதமிது! இவனோ ஐந்து வயதுள்ள சிறுவன் இப்பேர்பட்ட மதத்த சிங்கத்தோடு விளையாடுகின்றானே! ஆஹா என்ன வல்லமை; என்னதிடம்! நல்லது யாரென்று விசாரிப்போம். அப்பா! குழந்தாய் அது துஷ்டமிருகமாயினவே! அதோடு நீ விளையாடலாமா கடைசியாக வினையாக முடியுமே! வேண்டாமப்பா! விளையாடாதே அதை விட்டு விடு! அப்பா என் வார்த்தையைக்கேள்? பேஷ் நான் தெரிவித்ததும் விட்டு விட்டான் இவனைப்பார்த்தால் ராஜவடிவமாகவே யிருக்கிறது யாருடையபுத்திரனோ தெரியவில்லை! அதினாற்றான் இப்பேர்ப்பட்ட வல்லமை பொருந்தி யிருக்கிறது. அப்பா! நீ யாருடைய புத்திரனோ தெரிவிக்கிறாயா?

சர்வதமனன்-வசனம்

ஐயா நானோ மகாவீராதி வீரனாகிய துஷ்யந்த மகாராஜாவுடைய புத்திரனாகும் என் தாயாரை அழைக்கிறேன் நன்றாய் விசாரித்து தெரிந்துக்கொள்ளும் அம்மா அம்மா! யாரோ வந்திருக்கிறார் வந்து பாரம்மா

துஷ்யந்தன்-வசனம்

என்ன ஆச்சரியமிது நம்பெயரைக் குறிப்பாகத் தெரிவிக்கிறுனே நல்லது அவன் தாய் வரட்டும் பார்க்கலாம் அதோ வருகிறுள் கவனித்தால் நம் தேவியாகிய சகுந்தலாவைப்போற் காண்கிறது நல்லது அருகில் வரட்டும்.

(சகுந்தலா வந்ததும்)

சகுந்தலா-வசனம்

அப்பா கண்ணே! ஏன் என்னை அழைத்தனை.

சர்வதமனன் வசனம்.

அம்மா! யாரோ ஒருவர் வந்து என் தந்தை பேரைக் கேட்டார் நான் தெரிவித்தேன் அதற்காக உன்னை அழைத்தேன் அதோ பாரம்மா அவர்தான்.

[சகுந்தலா மௌனமாக நமஸ்கரித்து முகத்தைத் திருப்பிக்கொள்ளல்.]

துஷ்யந்தன் தரு.

ஆச்சுஞ இது உனக்குத்தகுதியா என்ற வர்ணமெட்டு.

மானேஎன்மேல் சினம் வையாதே
மன்னிப்பாய்பிழை இப்போதே
தேனே அறிவீனமாய்க் கோதே
தெரியாமல் திரஸ்கரித்தேன்
அரிவையே காரினி தான் (மா)

சகுந்தலா - தரு.

அனியாயமாய்ப் பேசலானீரே
அக்ரமத்துக்குட் பட்டீரே
எனைகருதாதீர் சொல்வீரே
இணையடி நான் பணிந்திட்டேன்
இனிஉயிர்போகத் துணிந்திட்டேன்
ஏதுயிவ்வாது தகாது நில்
வாது கரு தாதுபோம்
மாது உக வாது இனி (மா)

துஷ்:—கண்மணி பரிசோதித்தேன் கவலைப்படாதே! இனி நாம் நமது சர்வதமனனுகிய பரத னென்னும் இந்தக்குழந்தைக்கு இளவரசுபட்டந்தரிக்கலாம்.

சகுந்தலா வசனம்.

தங்கள் மனம் போலவே செய்யும் பிராணபதி.

[சர்வதமனனுகிய பரதனுக்கு இளவரசுபட்டம் சூட்டல்.]

சபையோர் சுபீபவா சுபீபவா சுபீபவா.

பார்ஸி சகுந்தலா சரித்திரம் சம்பூரணம்.

த. துரைசாமி முதலியார்,

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட் பில்டிங் போஸ்டு, சென்னை.

அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே இந்த அபூர்வமருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக் கூடியது இதை அனேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனா வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப்புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும் ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும் இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள் இதனால் தீரக்கூடிய அநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்த மயிரை கறுப்பாக்கும். உஷ்ணத்தினாலாவது புழு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும் நீர் வியாதிகள் தீரும் கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை தீரும் முகவசீகரத்தை உண்டாக்கும் தேக அசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும் மனதை அதிக உற்சாகப்படுத்தும் நரம்புகளுக்கு அதிக வலுவைத்தரும் தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும் குஷ்டரோகத்தை தீர்க்கும் க்ஷணத்தில் வாதபித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சகல தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத்தரும் மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத் தரும் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிடவேறு மருந்தே கிடையாது 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது பத்தியமுங்கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ள வேண்டியமுறை.

அரைக்கால் ஆழாக்கு சுத்த ஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது 7-துளி அதில்விட்டுக் கலக்கிக்குடித்துவிட வேண்டும் பத்தியமே கிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின்
விலை ரூபா 1 4 0 டஜன் 1-க்கு ரூபா 12 0 0

ஒரு மண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின்
விலை ரூபா 2 0 0 டஜன் 1-க்கு ரூபா 21 0 0

மலசுத்தி லேகியம்.

நீடித்த மலபந்தமுடையவர்களுக்கு இது சஞ்சீவி இரண்டு மூன்று நாட்களுக்கு ஓர் தடவை மலம். போகின்றவர்களும் ஆட்டுப் புழுக்கைப்போல் மலம்காய்ந்து தீய்ந்து போகின்றவர்களும், சரீரவரட்சி, வாய்நாற்றம், மூலத்தில் அரிப்பு உடையவர்களும் இந்த லேகியத்தை 10-நாட்கள் விடாமல் இரவு படுக்கைக்கும் போவதற்கு முன் சாப்பிட்டு வருவார்களானால் மலரோதனை கிரமப்பட்டு, அன்றுடம் மலம் காலையில் தாராளமாய் வந்துவிடும்.

டப்பி 1-க்கு விலை ரூபா 1 0 0

டிராமா புஸ்தக விளம்பரம்

கோவிலன் கர்ணகி சரித்திரம்	0	3	0
ஷை இரண்டாம் பாகம்	0	3	0
சதி அனுசுயா சரித்திரம் 1-வது	0	3	0
ஷை இரண்டாம்பாகம்	0	3	0
குசலவ சரித்திரம்1-வது	0	3	0
ஷை இரண்டாம்பாகம்	0	3	0
பாரீஸ் லங்காதகனம்	0	3	0
கேஜேந்திரமோக்ஷம் சரித்திரம்	0	[illegible]	0
பாரீஸ் மாவல்லப மோகனு	0	3	0
பாரீஸ் சகுந்தலா சரித்திரம்	0	3	0
பாரீஸ் பிரகலாதன் சரித்திரம்	0	3	0
பாரீஸ் குலோபகாவலி சரித்திரம்	0	3	0
ஷை இரண்டாம்பாகம்	0	3	0
அல்லிபாதுஷ்ஷா சரித்ரதிம்	0	4	0
புல் புல் யான் சரித்திரம	0	4	0
தசவதாரம் டிராமா	0	8	0
சாவித்திரி சத்தியவ ன்	0	8	0
பாரீஸ் நந்தனர் டிராமா	0	6	0
சம்பூரண ராமாயணம் டிராமா	2	8	0
ஞானசவுந்திரி சரித்திரம்	0	3	0
நல்லதங்காள் சரித்திரம்	0	3	0
ஷை இரண்டாம் பாகம	0	3	0
பாரீஸ் அல்லி அர்ச்சுன சரித்திாம்	0	3	0
ஷை இரண்டர்ம்பாகம்	0	3	0

இவைதவிர மற்றெல்லவித தமிழ் புத்தகங்களும் கிடைக்கும். மொத்தமாக வாங்கும் உபாத்தியாயர்களுக்கும். புஸ்தகவியாபாரிகளுக்குச்சரசமானவிலைக்குத்தரப்படும் புஸ்தக ஜாபிதாவேண்டுபவர்கள் முழுவிலாசத்தைத் தெரிவித்தால் இனமாக அனுப்பப்படும். எமது விலாசம்

டி. சாரதா புத்தகசாலை

நெ, 23 பாளையப்பன் தெருவு. மின்ட் போஸ்டு, சென்னை